டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in
agridoctor.in | 24.10.2024 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 107 - Madurai | Online Edition

கல்யாண் ஜுவல்லர்ஸ்

# பாரத் கொண்டைக்கடலையின் 2-ம் கட்ட சில்லறை விற்பனை துவக்கம்

புது தில்லி, அக்.23

மத்திய நுகர்வோர் விவகாரங்கள், உணவு, பொது விநியோகத் துறை அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி, தில்லியில் பாரத் கொண்டைக்கடலையை வாகனங்கள் மூலம் விற்பனை செய்யும் இரண்டாம் கட்ட சில்லறை விற்பனை நடைமுறையை நேற்று தொடங்கி வைத்தார். தேசிய நுகர்வோர் கூட்டுறவு கூட்டமைப்பு, தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பு, மத்திய விற்பனை நிலையங்கள் ஆகியவற்றின் சார்பில் இயக்கப்படும் கொண்டைக்கடலை விற்பனைக்கான வேன்களை அமைச்சர் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.



பாரத் கொண்டைக்கடலை விற்பனையின் 2-ம் கட்டத்தில், கையிருப்பிலிருந்து 3 லட்சம் டன் கொண்டைக்கடலை, உடைத்த கடலை ஆகியவை நுகர்வோருக்கு முறையே கிலோ ரூ.70, ரூ.58 என்ற விலைகளில் சில்லறை விற்பனை செய்யப் படுகிறது. கொண்டைக்கடலையைத் தவிர, அரசு பாரத் பிராண்டின் கீழ் பாசிப் பருப்பு, மசூர் பருப்பு ஆகியவற்றையும் விற்பனை செய்கிறது.

நிகழ்ச்சியின் போது செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் ஜோஷி, நுகர்வோருக்கு அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மலிவு விலையில் கிடைப்பதை உறுதி செய்வதில் அரசின் நிலைப்பாட்டை உறுதிப்படுத்தும் வகையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ள தாக தெரிவித்தார். அரிசி, கோதுமை மாவு, பருப்பு, வெங்காயம் போன்ற அடிப்படை உணவுப் பொருட்களின் சில்லறை விற்பனை மூலம் நேரடியாக அரசே விற்பனை செய்வது நிலையான விலையைப் பராமரிக்க உதவியுள்ளது என்று அவர் கூறினார்.

பருப்பு வகைகள் எளிதில் நியாயமான விலையில் கிடைப்பதை உறுதி செய்ய மத்திய அரசு பல்வேறு கொள்கை நடவடிக்கை களை எடுத்துள்ளது என அவர் தெரிவித்தார். உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக, அரசு ஆண்டுதோறும் பருப்பு வகைகளின் குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்தியுள்ளது என்றும் அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி குறிப்பிட்டார்.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# 5வது தேசிய நீர் விருது

## சிறந்த நிறுவனப்பிரிவில் TNAU-வுக்கு முதல் பரிசு

## ஜனாதிபதி திரௌபதி முர்மு வழங்கினார்



கோயம்புத்தூர், அக்.23

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், புதுமையான நீர் சேகரிப்பு பொறியியல் நடைமுறைகள், விவசாய நீர் மேலாண்மை தொழில்நுட்பங்கள் மற்றும் நீர் விழிப்புணர்வு பிரச்சாரங்களை ஏற்பாடு செய்ததற்காக 2023 ஆம் ஆண்டுக் கான தேசிய நீர் விருதில் சிறந்த நிறுவனம் (பள்ளி அல்லது கல்லூரி தவிர) பிரிவில் முதல் பரிசை வென்றது.

குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு 5வது தேசிய நீர் விருதுகள் 2023-ஐ புதுதில்லியில் வழங்கினார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் V.கீதாலட்சுமி, சிறந்த நிறுவனம் (பள்ளி அல்லது கல்லூரி தவிர) பிரிவில் முதல் பரிசை, டாக்டர் பு.ரவிராஜ் (வேளாண் பொறி யியல்) உடன் இணைந்து பெற்றார். விருதுக்கு பாராட்டுப் பத்திரம் மற்றும் கோப்பை மற்றும் இரண்டு லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

தேசிய நீர் விருதுகள் 2023, ‘ஜல்சம்ரித்பாரத்‘ என்ற அரசாங்

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

கத்தின் தொலை நோக்குப் பார்வையை நனவாக்க நாடு முழுவதும் உள்ள மக்கள் மற்றும் அமைப்புகளின் பாராட்டுக்குரிய பணிமற்றும் முயற்சிகளை எடுத்துக் காட்டுகிறது. மேலும் மத்திய ஜல்சக்தி அமைச்சர் சி.ஆர்.பாட்டீல் 5வது தேசிய நீர் விருதுகளை - 2023, 14.10.20 அன்று அறிவித்து பாராட்டினார்.

தண்ணீரின் முக்கியத்துவம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தியதற்காகவும், சிறந்த நீர் பயன்பாட்டு நடைமுறைகளைக் கடைப்பிடிக்க ஊக்குவிப்பதற்காகவும் இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மழை நீரை சேகரிப்பதற்காக மொத்தம் 2,300 கன மீட்டர் கொள்ளளவு கொண்ட 9 நிலத்தடி நீர் நிலைகளை உருவாக்கியுள்ளது, இது ஆய்வகங்கள், விவசாயம் மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளுக்கு நீர் தேவையை பூர்த்தி செய்ய பயன்படுத்தப் படுகிறது. கிட்டத்தட்ட 100% மழை நீர் சேகரிக்கப்பட்டு திறம்பட பயன்படுத்தப்படுகிறது.

மேலும், 400 கனமீட்டர் கொள்ளளவு கொண்ட பண்ணைக் குளத்தில் வடியும் நீரும் சேகரிக்கப் படுகிறது. மேலும், பெர்கோலேன் குளங்கள் (1 எண்), ரீசார்ஜ்ஷாஃப்ட்கள் (3 எண்கள்), ரீசார்ஜ்பிட்கள் (15 எண்கள்) வளாகத்தில் உள்ளன. அவை நிலத்தடி நீரை திறம்பட ரீசார்ஜ் செய்யப் பயன்படுகின்றன. மேலும் ஆண்டு தோறும் சுமார் 4.4 மில்லியன் லிட்டர் மழை நீர் நிலத்தடி நீரில் ரீசார்ஜ் செய்யப் படுகிறது. மேலும், வளாகத்தில் சுமார் 12,500 மரங்கள் நடப் பட்டுள்ளன. மரக்கன்றுகளுக்கு நீர் பாய்ச்சுவதற்கு சொட்டு நீர் பாசனம், மழைக் குழாய் பாசனம் மற்றும் பானை நீர்ப்பாசனம் ஆகியவை நிறுவப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள அனைத்து கட்டிடங்கள் மற்றும் விடுதிகளில் இருந்து கழிவுநீரை குழாய்கள் மூலம் 175 KLD திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு (STP) கொண்டு சென்று கழிவு நீரை சுத்திகரிக்கும் வகையில் நிலத்தடி வண்டி அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. STP இலிருந்து சுத்தி கரிக்கப்பட்ட கழிவு நீரில் 75 சதவீதம் தீவனப் பயிர்கள், வேளாண் மரங்கள் போன்றவற்றுக்கு சொட்டுநீர் பாசனம் மூலம் பாசனம் செய்ய பயன்படுத்தப்படுகிறது.

மேலும், நீர் மேலாண்மை நடவடிக்கைகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், கள விளக்கங்கள், கூட்டங்கள் ஆகியவை தொடர்ந்து ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. இரண்டு கொள்கை ஆவணங்கள், ஒன்று கைவிடப்பட்ட கிணறுகள் ரீசார்ஜ் தொழில்நுட்பத்தின் மூலம் மழை நீர் சேகரிப்பு மற்றும் மற்றொன்று ரீசார்ஜ் ஷாஃப்ட் தொழில்நுட்பத்தின் மூலம் துரிதப்படுத்தப்பட்ட ரீசார்ஜ் பற்றிய ஆவணங்களும் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.



## கோவை ஆர்.எஸ்.புரம் உழவர் சந்தை விலை விபரம் 23.10.2024

| வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் | வ. எண் | காய்கறி விபரம் | குறைந்த பட்சம் | அதிக பட்சம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | கத்திரி(Hybrid) | 30 | 35 | 56 | காளான் (சிப்பி/பட்டன்)200GM | 35 | 40 |
| 1A | கத்திரி(Simron) | 35 | 40 | 57 | உருளை (பிற) | 40 | 44 |
| 1B | கத்திரி(Nadu) | 45 | 48 | 57A | உருளை(ஊட்டி) | 48 | 52 |
| 2 | வெண்டை | 50 | 54 | 58 | மேரக்காய் | 25 | 30 |
| 3 | தக்காளி (நாடு) | 40 | 44 | 59 | முள்ளங்கி(சிவப்பு) | 25 | 30 |
| 4 | தக்காளி ஆப்பிள் | 32 | 35 | 60 | கேரட் | 50 | 54 |
| 5 | அவரை(பிஸ்கட்) | 85 | 90 | 61 | பீட்ரூட் (ஊட்டி) | 34 | 40 |
| 6 | புடலை | 40 | 44 | 62 | நூல்கோல் | 32 | 38 |
| 7 | பீர்க்கன் | 40 | 45 | 63 | டர்னிப் | 30 | 34 |
| 8 | சுரைக்காய் | 25 | 30 | 64 | மு.கோஸ் | 20 | 23 |
| 9 | பாகற்காய் | 40 | 45 | 65 | மு.கோஸ்(கலர்) | 0 | 0 |
| 10 | கொத்தவரை | 35 | 40 | 66 | காளிபிளவர் | 38 | 42 |
| 11 | பூசணி | 12 | 16 | 67 | பட்டாணி | 0 | 0 |
| 12 | அரசாணி | 15 | 20 | 68 | பூண்டு | 260 | 310 |
| 13 | ப.மிளகாய்(சம்பா) | 35 | 38 | 69 | இஞ்சி | 60 | 145 |
| 14 | ப.மிளகாய்(Bullet/Nadu) | 38 | 42 | 70 | புருக்கோலின் | 110 | 120 |
| 15 | சி.வெங்காயம் | 54 | 60 | 71 | பென்னி பீன்ஸ் | 150 | 160 |
| 16 | பெ.வெங்காயம்(புதியது/பழையது) | 50 | 60 | 72 | குடமிளகாய் | 60 | 66 |
| 17 | த.பயறு(வெள்ளை) | 38 | 42 | 73 | ஊட்டி அவரை | 0 | 0 |
| 18 | பச்சை மொச்சை | 50 | 60 | 74 | பஜ்ஜி மிளகாய் | 0 | 0 |
| 19 | முருங்கை | 50 | 58 | 71A | | | |
| 20 | தேங்காய் | 48 | 52 | | | | |
| 21 | மாங்காய் | 60 | 70 | | | | |
| 22 | வாழைக்காய் | 35 | 38 | | | | |
| 23 | சேனைகிழங்கு | 58 | 62 | | | | |
| 24 | கருணைகிழங்கு | 75 | 80 | 75 | எலுமிச்சை | 90 | 100 |
| 25 | சேப்பங்கிழங்கு | 50 | 55 | 76 | கொய்யா (வெள்ளை/சிவப்பு) | 50 | 65 |
| 26 | மரவள்ளி | 30 | 34 | 77 | | | |
| 27 | சர்க்கரைவள்ளி | 50 | 55 | 78 | பப்பாளி | 25 | 30 |
| 28 | கறிவேப்பிலை | 45 | 48 | 79 | மாதுளை | 120 | 200 |
| 29 | கொத்தமல்லி | 60 | 64 | 80 | திராட்சை | 70 | 80 |
| 30 | புதினா | 7 | 9 | 81 | மாம்பழம் | 150 | 180 |
| 31 | அகத்திக்கீரை | 12 | 15 | 82 | ஆப்பிள் | 100 | 140 |
| 32 | தண்டுக்கீரை | 12 | 15 | 83 | ஆரஞ்ச் | 40 | 65 |
| 33 | சுக்கிட்டி | 18 | 20 | 84 | சாத்துக்குடி | 50 | 60 |
| 34 | அரைக்கீரை | 15 | 18 | 85 | அன்னாசி பழம் | 60 | 70 |
| 35 | சிறுகீரை | 15 | 18 | 86 | சீதாப்பழம் | 45 | 50 |
| 36 | பாலாக்கு &வெந்தயம் | 20 | 25 | 87 | முலாம்பழம் | 50 | 55 |
| 37 | பருப்புக்கீரை | 12 | 15 | 88 | தர்பூசணி | 15 | 20 |
| 38 | முருங்கைக்கீரை | 8 | 10 | 89 | | | |
| 39 | வல்லாரை | 8 | 10 | 90 | கதளி | 55 | 60 |
| 40 | கோவக்காய் | 40 | 44 | 91 | பூவன் | 45 | 50 |
| 41 | வாழைத்தண்டு | 5 | 10 | 92 | ரஸ்தாளி | 50 | 56 |
| 42 | வாழை இலை | 4 | 5 | 93 | கற்பூரவள்ளி | 50 | 56 |
| 43 | வாழைப்பூ | 10 | 15 | 94 | மோரிஸ் | 34 | 38 |
| 44 | முட்டைகோஸ் (உள்ளூர்) | 20 | 22 | 95 | நாடன் | 45 | 50 |
| 45 | வெள்ளரி | 22 | 26 | 96 | நேந்திரன் | 45 | 48 |
| 46 | பீட்ரூட் (உள்ளூர்) | 22 | 26 | 97 | செவ்வாழை | 80 | 85 |
| 47 | சுண்டக்காய் | 140 | 150 | 98 | பேரிக்காய் | 120 | 160 |
| 48 | வெங்காயத்தாள் | 8 | 10 | 99 | நார்த்தங்காய் | 35 | 40 |
| 49 | | | | 100 | கறிப்பலா | 35 | 40 |
| 50 | நிலக்கடலை | 55 | 60 | 101 | டிராகன் ப்ரூட் | 150 | 160 |
| 51 | மக்காச்சோளக்கதிர் | 24 | 28 | 102 | நெல்லிக்காய் | 65 | 75 |
| 52 | | | | | | | |
| 53 | ஸ்வீட் கான் | 34 | 38 | | | | |
| 54 | இளநீர்(சிறியது/பெரியது) | 30 | 33 | | | | |
| 55 | முள்ளங்கி(வெள்ளை) | 25 | 30 | | | | |

# குறுகிய கால துவரை சாகுபடி குறித்த விவசாயிகள் பயிற்சி

அரியலூர், அக்.23

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் வட்டார வேளாண் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் மாநில விரிவாக்கத் திட்டங் களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் (அட்மா) விவசாயிகளை குறுகிய கால துவரை சாகுபடி மேற்கொள்ள ஊக்குவிக்கும் குறுகிய கால துவரை சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்த மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வரும் கல்லாத்தூர் கிராமத்தில் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சுப்ரமணியன் தலைமையில் நடைபெற்றது.

சோழமாதேவி கிரீடு வேளாண் அறிவியல் நிலையத்தின் மூத்த விஞ்ஞானி மற்றும் தலைவர் அழகுகண்ணன் விவசாயிகளுக்குப் பயிற்சி அளித்தார். உடலுக்குத் தேவையான புரதச் சத்தினை அளிக்க அன்றாடம் உணவில் பயன்படுத்தும் உணவுப் பொருட் களில் துவரை மிக முக்கியமானதாகும். தற்போது துவரை சாகுபடி பரப்பளவு பெருமளவு குறைந்துள்ளது. எனவே துவரை சாகுபடி பரப்பினை அதிகரித்து உற்பத்தியை அதிகரிப்பதே இப்பயிற்சியின் நோக்கமாகும். பருவத்திற்கேற்ற துவரை இரகங்கள், குறுகிய கால துவரை இரகங்கள் வம்பன்-3 மற்றும் ஏபிகே-1 ஆகியவற்றின் சிறப்பியல்புகள், ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் டிரைக்கோடெர்மா விரிடி கொண்டு விதை நேர்த்தி செய்வது, விதைப்பு, களை நிர்வாகம், நீர் நிர்வாக முறைகள், உரச்செலவை குறைக்க மண் ஆய்வு செய்து உரமிடுதல், பூக்கள் உதிர்வதைத் தடுத்து அதிக காய்கள் உருவாகவும், 20 சத கூடுதல் மகசூல் பெறவும் பயறு ஒண்டர் எனும் வளர்ச்சி ஊக்கி தெளிக்கும் முறை, ஒருங்கிணைந்த பூச்சி, நோய் நிர்வாக முறைகள், மஞ்சள் மற்றும் நீல வண்ண அட்டைகள் கொண்டு சாறு உறிஞ்சும் பூச்சிகளைக் கட்டுப் படுத்துவது, முட்டை ஒட்டுண்ணி அட்டை கொண்டு பூச்சிகளை அழிப்பது, இனக்கவர்ச்சிப் பொறி கொண்டு பூச்சிகளைக் கவர்ந் தழிப்பது போன்ற அங்கக முறை பூச்சிக் கட்டுப்பாட்டு முறைகள், கூடுதல் வருமானம் பெற ஊடுபயிர் சாகுபடி செய்வது, அறுவடை செய்தல், இலாபகரமாக விற்பனை செய்தல் ஆகிய தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளித்தார்.

இத்துடன் நெல், உளுந்து, நிலக்கடலை சாகுபடித் தொழில் நுட்பங்கள், ஒருங்கிணைந்த பண்ணையம் குறித்து விவசாயி களுக்கு விளக்கினார். வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் மீனாட்சி அட்மா திட்ட செயல்பபாடுகள் குறித்து விளக்கினார்.

இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் மீனாட்சி, உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் ஆரோக்கியராஜ், மகேஷ்குமார், உழவர் நண்பர் சுந்தரவடிவேல், ஆகியோர் செய்திருந்தனர். கல்லாத்தூர் கிராமத்தைச் சேர்ந்த விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் இப்பயிற்சியில் கலந்து கொண்டனர்.



# சிங்களாந்தபுரம் கிராம வேளாண் முன்னேற்றக்குழு கூட்டம்



திருச்சி, அக்.23

திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டாரம், சிங்களாந்தபுரம் கிராமத்தில் வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, துறையூர் வட்டாரத்தின் சார்பாக வயல் விழா நடத்தப்பட்டது.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை மூலம் கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சி திட்டம் (2024-25)செயல்படுத்தப்பட்ட துறையூர் வருவாய் கிராமத்தைச் சேர்ந்த சிங்களாந்தபுரம் கிராமத்தில் உழவர்களுக்கு வயல் விழா (21-10-24) அன்று நடைபெற்றது. இந்த விவசாயிகள் பயிற்சியில் இமயம் வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியின் பூச்சியியல் துறை, உதவி பேராசிரியர் முனைவர் செ.பழனிவேல் கலந்து கொண்டு அங்கக வேளாண்மை, இயற்கை வேளாண்மை, ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை மற்றும் மண் வள மேலாண்மை பற்றிய விபரங்களை தெளிவாக எடுத்துரைத்தார்.

துறையூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் ரவி விவசாயிகளின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தார். வேளாண் பொறியியல் துறையின் சார்பாக சுவாமிநாதன் கலந்து கொண்டு பொறியில் துறையின் மானியத் திட்டங்கள் பற்றிய விபரங்களை தெளிவாக எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் மனோகரன், கலந்து கொண்டு வேளாண்மை துறையின் மானிய திட்டங்களை எடுத்துக் கூறினார்.

வட்டார தொழில்நுட்ப மேலாளர் அன்பழகன் மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் சரவணன் மற்றும் சரண்யா அட்மா திட்ட பயன்பாடுகள் பற்றிய விபரங்களை தெளிவாக எடுத்துரைத்தார்.

இப்பயிற்சியில் சிங்களாந்தபுரம் கிராமத்தைச் சார்ந்த 40 விவசாயிகள் கலந்து கொண்டனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# அங்கக வேளாண்மையில் திரவ உயிர் உரங்களின் முக்கியத்துவம்

தற்போது அனைத்து தரப்பு விவசாயிகள் மற்றும் பொது மக்களிடம் அங்கக விளைபொருட்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கின்றது. இந்நிலை தொடரும் போது அங்கக விளை பொருட்களின் தேவை அதிகமாக இருக்கும். அதைத் தொடர்ந்து அங்கக வேளாண் இடுபொருட்களின் விலையும் அதிகமாகக் கூடும். இதற்கிடையில் அங்கக விவசாயிகள் அனை வருக்கும் திரவ உயிர் உரங்கள் மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டுக் காரணிகள் பற்றிய புரிதல் அவசியம்.

### திரவ உயிர் உரங்கள்

திரவ உயிர் உரங்கள் அனைத்தும் வீரியமாக செயல்பட்டு வளிமண்டலத்தில் உள்ள தழைச்சத்தை பயிர்களுக்கு கிரகித்து கொடுத்தும், மண்ணில் கிடைக்காத நிலையில் உள்ள மணி சாம்பல் சத்தும் மற்றும் துத்தநாக சத்தினை கரைத்து வேர் மூலம் பயிருக்கு கொடுக்க கூடிய நுண்ணுயிர்களை கொண்டவையாகும். இவற்றில் பெரும்பாலனவை வேர்பகுதியிலிருந்து வேலை செய்பவை ஆகும். அசட்டோபாக்டர் மற்றும் சூடோமோனா வகையில் ஒரு சில திரவ உயிர் உரங்கள் மட்டுமே இலைபரப்பில் வேலை செய்யக்கூடியவை. பொதுவாக பயிருக்கு தேவைப்படும் 16 வகையான சத்துகளில் மிக அதிக அளவில் தேவைப்படுவன தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து அதனைத் தொடர்ந்து துத்த நாகசத்தும் தேவைப்படுகிறது.

விவசாயிகள் தொடர்ந்து இரசாயன உரங்களை பயன்படுத்தி வந்ததன் காரணமாக மண்ணில் நன்மை செய்யும் நுண்ணுயிர் களின் எண்ணிக்கை மிகக் குறைந்துள்ளது. இரசாயன உரங்கள் பயன்படுத்த ஆரம்பித்த பின்னர் மண்ணில் கரிமச் சத்தின் அளவு மிகவும் குறைந்துள்ளது. மண்ணில் கரிமச்சத்தின் அளவு குறையும் போது நுண்ணுயிர் பெருக்கத்திற்கு தேவையான ஊட்டப் பொருட்கள் மண்ணில் இல்லாததால் நுண்ணுயிர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது.

மேலும், வளிமண்டலத்தில் சுமார் 78 சதம் உள்ள தழைச் சத்தினை அசோஸ்பைரில்லம் மற்றும் ரைசோபியம் போன்ற நுண்ணுயிர்கள் வேருக்கு அருகில் இருந்து பயிருடன் இணைப்பை ஏற்படுத்திக் கொண்டோ அல்லது வேர்முடிச்சுகளை ஏற்படுத்தி அவற்றின் உள்ளே இருந்து கொண்டோ நிலைநிறுத்துகிறது.

இவை ஏக்கருக்கு சுமார் 15 முதல் 25 கிலோ தழைச்சத்தினை கிரகித்து பயிர்களுக்கு கொடுக்கிறது. (கூறியுள்ள அளவு நுண்ணுயிருக்கு ஏற்ப மாறுபடலாம்) இவற்றினை விதைநேர்த்தி செய்ய நெல் நாற்றில் நனைக்க மற்றும் மட்கிய தொழுஉரம் அல்லது மணலுடன் கலந்தும் வயல்களில் இட பயன்படுத்தலாம். மணிச்சத்து சாம்பல் சத்து மற்றும் துத்தநாக சத்தினை கரைத்துக் கொடுக்க கூடிய நுண்ணுயிரிகள் அனைத்தும் இனப்பெருக்கத்தின்போது அங்கக அமிலங்களை சுரக்கின்றன. அவை மண்ணில் பிணைந்துள்ள மணிச்சத்து, சாம்பல்சத்து மற்றும் துத்தநாக சத்தினை கரைத்து பயிருக்கு அளிக்கிறது. உயிர் உரங்கள் பயிருக்கு இடும்போது அந்தப் பயிருக்கு என்ன சத்து குறைபாடுகள் மற்றும் தேவை இருக்கிறதோ அவற்றை மட்டும் எடுத்துக்கொள்ளும். தேவைக்கு அதிகமாக எடுத்துக் கொள்ளாது. உயிர்உரங்கள் மண்ணில் இட ஏக்கருக்கு 200 மி.லி.போதுமானது. விதை நேர்த்தி செய்திட மற்றும் வேர்கள் நனைத்திட ஒரு ஏக்கருக்கு தேவையான விதைகள் மற்றும் நாற்றுகளுக்கு திரவ உயிர் உரங்கள் 100 மி.லி போதுமானது. ஒருமுறை திறந்து பயன்படுத்தப்பட்ட உயிர் உர குப்பிகளை முழுவதுமாக உடனே பயன்படுத்தவும்.

இதனை, வீ.கருணாநிதி, வேளாண்மை அலுவலர், திரவ உயிர் உர உற்பத்தி மையம், மானாமதுரை தெரிவித்தார்.

## மழைக்காலங்களில் கால்நடைகளை தாக்கும் நோய்களும் தடுப்பு முறைகளும் குறித்த இலவசப் பயிற்சி

கரூர், அக்.23

கரூர் மாவட்டம், மண்மங்கலம் அருகில் பண்டுதகாரன்புதூரில் அமைந்துள்ள கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய வளாகத்தில் ‘மழைக்காலங்களில் கால்நடைகளை தாக்கும் நோய்களும் தடுப்பு முறைகளும்‘ பற்றிய ஒரு நாள் உள்வளாக பயிற்சி 25.10.24 (வெள்ளிக்கிழமை) அன்று இலவசமாக அளிக்கப்படவுள்ளது. விவசாயிகள் / கால்நடைப் பண்ணையாளர்கள் அனைவரும் கலந்து கொண்டு, மழைக்காலங்களில் கால்நடைகளை நோய்களிலிருந்து பாதுகாத்து கொள்வது பற்றிய விபரங்களை தெரிந்து கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம். பயிற்சி பெற ஆர்வம் உள்ளோர் 04324 294335 மற்றும் 73390 57073 ஆகிய தொலைபேசி எண்களில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளுமாறு மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் கேட்டுக்கொள்கிறார். மேலும் பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர் பயிற்சி நாளன்று காலை 10.30 மணிக்கு பயிற்சி மைய வளாகத்திற்கு வருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

# பயிருக்கு எதிரி பூச்சியா? நோயா?

நாம் கஷ்டப்பட்டு கடன் வாங்கி சாகுபடி செய்த பயிரை ஒரு பக்கம் மழை வஞ்சித்தாலும், மறுபுறம் பூச்சி நோய்கள் தாக்குகின்றன. இவற்றின் தாக்குதலை சமாளிக்க முடியாத விவசாயிகள் தலையை பிய்த்துக் கொண்டு வழி தெரியாமலே கண்ட கண்ட மருந்துகளை பூச்சி மருந்து கடைக்காரர் கொடுப்பதை வாங்கி (பல ஆயிரம் செலவழித்து) வயலில் தெளித்து பூச்சி எது?

நோய் எது என தெரியாத நிலையில் தான் இன்று கிராமப்புற பகுதியில் பெரும்பாலான விவசாயிகள் உள்ளனர். இதனுடைய தாக்குதலை சரிவர கண்டுபிடிக்க தெரியாத நிலை தான். அதற்காக தான் வேளாண்மை துறையில் பண்ணை பள்ளி, ஓர் கிராமம் ஓர் பயிர் என பல்வகையான திட்டங்களை அறிவித்து, விவசாயிகளை ஒரு வல்லுநராக மாற்ற முயற்சி செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்க விழிப்புணர்வு நிகழ்வாகும்.

**பூச்சி என்றால் என்ன? அதனுடைய தாக்குதல் எப்படி இருக்கும்?**

பூச்சி என்பது இன்செக்டா வகுப்பின் முதுகெலும்பு இல்லாத வகையாகும். பெரும்பாலான பூச்சிகள் முட்டையிட்டு தான் இனப் பெருக்கம் செய்கின்றன. இதனுடைய வாழ்நாள் மிக குறைவு. ஒரு பயிரின் சாகுபடி முதல் அறுவடை முடியும் வரை அவைகள் 3 முதல் 5 தடவை தன்னுடைய சந்ததியை உருவாக்கும் ஆற்றல் படைத்தது. இது முட்டை, புழு பருவம், கூண்டுப்புழு பருவம், முதிர்ந்த அந்து பூச்சி (வண்ணத்து பூச்சி) பருவம் போன்ற 4 பருவங்களை கொண்டது.

**பூச்சிகளை அதனுடைய வாயமைப்பை வைத்து 3 பிரிவாக பிரித்துள்ளனர்.**

1) சாறு ஊறிஞ்சும் பூச்சிகள்
2) சுரண்டி தின்னும் பூச்சிகள்
3) கடித்து சுவைத்து தின்னும் பூச்சிகள்.

**பூச்சிகளின் மோப்ப சக்தி எப்படி தெரியுமா?**

நம்மை விட நாய்களுக்கு 5 மடங்கு மோப்ப சக்தி உண்டு. அதைவிட பூச்சிகளுக்கு (அந்து பூச்சிகளுக்கு) 10 மடங்கு மோப்ப சக்தி உண்டு. அதனாலே என்னவோ, ஆண் அந்து பூச்சிகள் எவ்வளவு தூரத்தில் பெண் அந்துப்பூச்சிகள் இருந்தாலும்கூட அதனுடைய பெரோமோன்களை வைத்து கண்டுபிடித்து, இனப்பெருக்கம் செய்கின்றன.

**தாவர நோய்கள்**

இது தாவரத்தின் இயல்பான அமைப்பை, செயல்பாடுகளை மாற்றி அமைக்க கூடியது தான் நோய்கள். இது விதை, காற்று, நீர்ப்பாசனம் மண் மூலமாக பரவுகிறது.

**நோய்களை ஏற்படுத்தும் காரணிகள்**

1) பூஞ்சை, 2) பாக்டீரியா, 3) வைரஸ், 4) மைக்ரோ பிளாஸ்மா போன்ற காரணிகளால் நோய் ஏற்படுகின்றன.

பொதுவாக தாவரங்களை பூச்சிகளும் நோய்களும சமமான நிலையில் தாக்குகின்றன. தகுந்த சூழ்நிலையில் இருந்தாலும் எதாவது ஒன்று அதிகமாக இருக்கும். எடுத்துக்காட்டாக கோடை காலத்தில் பூச்சிகளின் தாக்குதல் குறைவாக தென்படுவதாக விவசாயிகள் கருதுகின்றனர்.

**பூச்சி / நோயை ஒருங்கிணைந்த முறையில் கட்டுப்படுத்திடும் வழிமுறைகள் என்ன?**

1) கோடை உழவு போடுவதால் மண்ணில் உள்ள கூண்டு புழுக்கள் போன்றவை அழிக்கப்படுகிறது. உழவு போடுவதால் மண்ணின் மேற்பரப்பு சூடாகி நோய் கிருமிகளும் அழிக்கப்படு கின்றன.

**2) விதை நேர்த்தி :** பூச்சிகளை கட்டுப்படுத்த பூச்சி கொல்லி மருந்து மூலமாக விதை நேர்த்தி. எடுத்துக்காட்டாக பயறுவகை பயிர்களில் இமிடா குளோபிரிட் விதை நேர்த்தி நோய்களை கட்டுப்படுத்த விரிடி சூடாமானஸ் விதை நேர்த்தி.

3) விளக்கு பொறி, இனக்கவர்ச்சி பொறி போன்றவைகளை வைத்து பூச்சிகளை கட்டுப்படுத்தலாம். நோய்களின் தாக்குதலை அறிந்து உயிர் பூஞ்சானம் பாக்டீரியா கொண்டோ அல்லது இரசாயனங்களை கொண்டோ அழிக்கலாம்.

4) பயிர் சுழற்சி போன்றவற்றின் மூலமாக பூச்சி/நோய்களை கட்டுப்படுத்தலாம்.

**பூச்சி நோய் தாக்குதலின் அறிகுறிகள்?**

பூச்சிகள் இளம் பருவத்தில் சுரண்டி சாற்றை உறிஞ்சுவதால் பச்சையம் இழந்து வெளிறிய நிலையில் இலைகள் இருக்கும். நோய்கள் இலையின் நுனியில் காய்ந்து வெளிறிய கோடுகள் இலைபரப்பில் அலை அலையாக பளிச்சென தெரியாமே காணப்படும். பூச்சிகள் நடமாட்டம் இருப்பதால் விவசாயிகளுக்கு எளிதாக தெரியும்.

நோய்களுள்ள இலையை உற்று நோக்கினால் தெளிவாக தெரியும். அதனை அதனுடைய பொருளாதார சேத நிலை (ETL) அறிந்து தக்க சமயத்துல தகுந்த அளவு இராசயன மருந்தோ அல்லது உயிரியல் மருந்தோ தெளிக்க வேண்டும். அவ்வாறு செய்தால் தான் சாகுபடி பயிரில் பூச்சி/நோய்களை கட்டுப்படுத்தி அதிக மகசூல் பெறலாம். பூச்சிகளையும் நோய்களையும் பயிருக்கு எதிரியாக பார்க்காமல் அவற்றையும் நண்பனாக பாவித்து வயலை விட்டு விரட்டும் வேலையை ஒருங்கிணைந்த முறையில் செய்வோம்.

நன்மை தரும் பூச்சிகளை வரவழைத்து பயிரை காப்போம். நோய் கிருமிகள் அண்டாதவாறு வரு முன்னர் பயிரை பாதுகாப்போம்.

பூச்சி/நோய்களை அடையாளம் கண்டு குறைந்த செலவிலே கட்டுபடுத்துவோம்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில்

# மரபணுத் தொகை தரவுப் பகுப்பாய்வு

# கைத்திறன் பயிற்சி



கோயம்புத்தூர், அக்.23

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும்உயிர் தகவலியல் துறை, தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில் நுட்ப மையத்தில் அக்டோபர் 22 முதல் 25 வரை மரபணுத் தொகை தரவுப் பகுப்பாய்வு கைத்திறன் பயிற்சி நடைபெற்றது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், ஆந்திரப்பிரதேசம் எஸ்.வி. பல்கலைக்கழகம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம், குமரகுரு வேளாண்மை நிறுவனம், கோழிக்கோடு பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி ஆகியவற்றிலிருந்து இந்தியா முழுவதும் உள்ள பல்வேறு நிறுவனங்களைச் சேர்ந்த மாணவர்கள் இந் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தகவலியல் துறை பேராசிரியர் மற்றும் தலைவர், முனைவர் எல்.அருள் வரவேற்புரை நிகழ்த்தினார். அவர் தனது வரவேற் புரையில் பயிற்சித் திட்டத்தின் நோக்கம் மற்றும் என்.ஜி.எஸ் நுட்பங்களின் முக்கியத்துவத்தை குறிப்பிட்டார். வரவேற்பு உரையைத் தொடர்ந்து, பங்கேற்பாளர்கள் தங்களை அறிமுகப் படுத்திக் கொண்டனர். முனைவர் ந.செந்தில், CPMB&B தொடக்க உரையாற்றினார். அங்கு அவர் கிடைக்கக் கூடிய ஏராளமான மரபணு தரவு மற்றும் புதிய மரபணுத் தொகை தரவு வரிசை முறை தொழில்நுட்பங்கள் மற்றும் தொடர்புடைய சிறு குறிப்புகளைக் கற்றுக் கொள்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் முனைவர் வி.பாலசுப்பிரமணி பாராட்டி, என்.ஜி.எஸ். தொழில்நுட்பங்களின் முக்கியத்துவம், அவற்றின் பயன்பாடுகள் மற்றும் நடப்பு அறிவியலில் அவற்றின் தாக்கம் ஆகியவற்றை நேரடி உதாரணங்களுடன் எடுத்துரைத்தார். தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிர் தகவலியல் துறை உதவி பேராசிரியர் முனைவர் மு.ஜெயகாந்தன் நன்றியுரை வழங்கினார்.

# ஓசூர் வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்கு வயல் விழா பயிற்சி

கிருஷ்ணகிரி, அக்.23

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் வட்டாரத்தில் உள்ள விவசாயிகளுக்கு மாநில விரிவாக்க உறுதுணை சீரமைப்பு (அட்மா) திட்டத்தின் கீழ் பஞ்சாட்சிபுரம் கிராமத்தில் வயல்விழா பயற்சியை வேளாண்மை உதவி இயக்குநர், ஓசூர் தலைமை தாங்கி துவக்கி




வைத்தார். அப்போது அவர் பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயி களுக்கு உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள் மற்றும் சூடோ மோனாஸ் பயன்கள் பற்றி விவசாயிகளுக்கு புரியும் வகையில் விளக்கி கூறினார். மேலும் இந்த ஆண்டு செயல்படுத்தப்படும் முக்கியத் திட்டங்களான மாநில வேளாண் வளர்ச்சி திட்டம், முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் பயன்கள் மற்றும் மானிய விபரங்கள் பற்றி விவசாயி களுக்கு புரியும் வகையில் விளக்கி கூறினார். இந்த பயிற்சியில் அதியமான் வேளாண் கல்லூரி, உதவி பேராசிரியர் ஹரிணி, பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு மண் மாதிரி சேகரிக்கும் முறைகள், மண்வள மேலாண்மையின் முக்கியத்துவம், ஊட்டச்சத்து மேலாண்மை மற்றும் ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை முறை பற்றியும், இயற்கை உரங்கள் தயாரிப்பு, பயன்படுத்தும் விதம் மற்றும் பயன்கள் பற்றி விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். வேளாண்மை அலுவலர், ஓசூர் த.ரேணுகா, ஊட்டமேற்றிய தொழுஉரத்தின் முக்கியத்துவம், மண் புழு உரம் தயாரிப்பு பற்றியும், PMKISAN திட்டத்தில் பயன்பெற செய்ய வேண்டிய வழிமுறைகள் பற்றியும், சொட்டு நீர் பாசனத்தின் முக்கியத்துவம் மற்றும் பயன்கள் பற்றியும், Nano Urea பயன்கள் பற்றியும் விவசாயிகளுக்கு புரியும் வகையில் விளக்கமளித்தார்.

துணை வேளாண்மை அலுவலர், ஓசூர் எம்.முருகேசன், வரப்பு பயிர் முக்கியத்துவம், துவரை நாற்று நடவு சாகுபடி தொழில் நுட்பங்கள் பற்றியும், ஊடுபயிர் பயன்கள் பற்றியும், காட்டுப் பன்றிகளை கட்டுப்படுத்தும் தொழில்நுட்ப முறைகள் பற்றியும் விவசாயி குகளுக்கு விளக்கமளித்தார். விதைச்சான்று அலுவலர், கிருஷ்ணகிரி சரவணன், விதை நேர்த்தி செய்வதின் முக்கியத் துவம் பற்றியும், விதைப்பண்ணை அமைப்பதின் பயன்கள் மற்றும் முக்கி யத்துவம் பற்றியும், தரமான விதைகளை தேர்ந்தெடுக்கும் தொழில் நுட்ப முறைகள் பற்றியும் விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். உதவி வேளாண்மை அலுவலர், நாகொண்டப்பள்ளி சுந்தர்ராஜ், உழவன் செயலியின் முக்கியத்துவம், பயிர்காப்பீடு செய்வதின் பயன்கள் பற்றியும், மண்புழு உரம் தயாரிக்கும் தொழில்நுட்ப முறைகள் மற்றும் பயன்கள் பற்றி விவசாயிகளுக்கு கூறினார். மேலும் வேளாண்மைத் துறையில் மானியத்தில் கொடுக்கப்படும் உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்கள், விதைகள் போன்ற பொருட் கள் விவசாயிகளின் கண்காட்சிக்கு வைக்கப்பட்டது. வட்டார தொழில் நுட்ப மேலாளர் சோ.சுகுணா, விவசாயிகளுக்கு பஞ்சகாவியா தயாரிக்கும் முறையும் வயலில் இடுவதால் ஏற்படும் நன்மைகள் பற்றி செயல்விளக்கம் செய்து காண்பித்தார். மேலும் உதவி தொழில்நுட்ப மேலாளர் சண்முகம், அட்மா திட்டத்தின் பயன் பாடுகள் மற்றும் செயல்விளக்கங்கள் பற்றி கூறினார்.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
IFFCO
NANO
UREA
PLUS
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

# கார்த்திகை பட்ட நிலக்கடலை சாகுபடிக்கான ஆயத்த பயிற்சி

விருதுநகர், அக்.23

சேவையூர் பாரம்பரிய பயிர் உற்பத்தியாளர் நிறுவனத்தின் ஸ்ரீ நிர்வாக இயக்குநர் பத்மாவதியின் ஆலோசனையின்படி திட்ட இயக்குநர் ஜான் பிரிட்டோவின் வழிகாட்டுதலின் பேரில் காரியாபட்டி (கல்யாணிபுரம்) நரிக்குடி வட்டார குறவை குளம் கிராமங்களில் வருகின்ற கார்த்திகை பட்ட நிலக்கடலை சாகுபடிக்கான ஆயத்த பயிற்சி 23.10.24 அன்று செயல் அலுவலர் பார்த்தசாரதி தலைமையில் நடைபெற்றது.

அவர் பயிற்சியை துவக்கி வைத்து பேசுகையில், வருகின்ற பட்டத்திற்கு தேவையான நிலக்கடலை சாகுபடிக்கான இடு பொருட்கள் அனைத்துமே கம்பெனியில் வாங்கி வைக்கப்பட்டு உள்ளது. நிலக்கடலை சாகுபடி செய்யப் போகும் விவசாயிகள் அவற்றை வாங்கி பயன்படுத்திட கேட்டுக்கொண்டார். அத்துடன் விதைப்பு முதல் அறுவடை காலம் முடிய கம்பெனி சார்பாக விவசாய வல்லுநரின் ஆலோசனைகள் மற்றும் கள ஆய்வு இனி வருங்காலங்களில் ஒவ்வொரு புதன்கிழமையன்று இருப்பதாக கூறினார்.

நிலக்கடலை சாகுபடியில் பின்பற்ற வேண்டிய தொழில் நுட்பங் களை வேளாண் வல்லுநர் சந்திர சேகரன் எடுத்துக்கூறி பேசுகையில், நிலக்கடலையில் அதிகமாக வாடல் நோய் தாக்குதல் வரும் அதைதடுக்க 100 கிலோ தொழு உரத்துடன் 2 கிலோ டி.விரிடி யை கலந்து நீர் தெளித்து 24 மணி நேரம் வைத்திருந்து அதனை நிலத்தில் விதைத்தால் வாடல் நோய் என்ற குச்சி நோய் தாக்குதல் விரைவாக தடுக்க முடியும் என்றார். மேலும் பயிற்சுழற்சியை முறையாக கையாள வேண்டும். ஒரே பயிறை ( நிலக்கடலை ) திரும்ப திரும்ப அதே இடத்தில சாகுபடி செய்தால் இந்த பூஞ்சான நோய் தாக்குதல் அதிமாக இருக்கும் என எச்சரித்தார். மக்கிய சாணத்துடன் டி.விரிடி கலந்து குறவைக்குளத்தில் வெற்றி வேல் தோட்டத்தில் செயல் விளக்கமாக செய்து காட்டப்பட்டது. இதில் வெற்றி செல்வி, கணேச மூர்த்தி, மாயன் இராமநாதன், வேல் முருகன், கிருஷ்ணன், முருகன் கலந்து கொண்டனர். கல்யாணி புரத்தில் பயிர் எண்ணிக்கை பாரமரிப்பு குறித்து விவாதிக்கப்பட்ட நிகழ்வில் வேல்முருகன், பரதன், தூதன், வெற்றி வேல், கந்தசாமி, அர்ச்சுணன் கலந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் வணிக பிரதிநிதி பரதன் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார்.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக, (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# உழவர் வயல்வெளிப்பள்ளி (நெல்) பயிற்சி நடந்தது



சிவகங்கை, அக்.23

22.10.24 செவ்வாய்கிழமை மானாமதுரை வட்டாரம் பி.ஆலங்குளம் கிராமத்தில் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமய மாக்கல் திட்டம் TNIAMP-IV (2024-25) கீழ்வைகை உபவடி நிலப்பகுதி திட்டம் மூலம் உழவர் வயல்வெளிப்பள்ளி (நெல்) பயிற்ச்சியானது இக்கிராமத்தை சேர்ந்த 8 பெண்கள் உட்பட 25 முன்னோடி விவசாயிகளுக்கு நடைபெற்றது.




ஆறு கட்டங்களாக நடைபெறும் இந்த பயிற்சியில் இரண்டாம் கட்டப் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை மானாமதுரை வேளாண்மை உதவி இயக்குநர் ஜா.இரவிசங்கர், தலைமை யேற்று துவங்கி வைத்தார். விதைப்பண்ணை விவசாயி ஜெயராமன், முன்னிலை வகித்தார். இப்பயிற்சியில் மதுரை RNR அக்ரிடெவலப்பஸ் உரிமையாளர் ராஜேஸ் நல்லையா, கலந்து கொண்டு நெல் சாகுபடியில் நாற்றாங்கால் அமைத்தல் நாற்றின் வயது பற்றியும், நடவு வயல் தயார் செய்தல், அடியுரம் இடுதல் மற்றும் நுண்ணூட்ட உரமிடல் போன்ற தொழில் நுட்பங்களும் பிறகு நெல் நடும் போது திருந்திய நெல் சாகுபடி முறையில் நடவு செய்யவேண்டும் எனவும் வரப்பில் உளுந்து சாகுபடி செய்வதால் ஏற்படும் நன்மைகள் பற்றி செயல் விளக்கத்துடன் எடுத்துக்காட்டினார். மேலும் இக்கிராம விவசாயி கண்ணன் வயலில் அமைக்கப்பட்ட நெல் நாற்றங்கால் பார்வையிடப்பட்டது. இறுதியாக ஆயர்பாடி என்ற முன்னோடி விவசாயி நன்றி கூறினார். இப்பயிற்சியினை மானாமதுரை துணை வேளாண்மை அலுவலர் நா.சப்பாணிமுத்து மற்றும் இப்பகுதி உதவி வேளாண்மை அலுவலர் சுமதியும் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தனர்.

# அங்கக வேளாண் இடுபொருள் தயாரித்தல் பயிற்சி வழங்கப்பட்டது



இராமநாதபுரம், அக்.23

இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வட்டாரம் வேளாண்மை துறையின் கீழ் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்கம் மையம் உச்சிப்புளியில் 22/10/24 அன்று பாரம்பரிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு அங்கக வேளாண் இடுபொருள் தயாரித்தல் குறித்து பயிற்சி வழங்கப்பட்டது. செல்வம், வேளாண்மை உதவி இயக்குனர் திருப்புல்லாணி விவசாயிகள் மற்றும் அனைத்து துறை அலுவலர்களை வரவேற்றுப் பேசி பயிற்சியினை துவக்கி வைத்தார்.

பயிற்சியில் இராமநாதபுரம் வேளாண் அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் வள்ளல் கண்ணன் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பஞ்சகாவியம், கன ஜீவாமிர்தம், மூலிகை பூச்சி விரட்டி மற்றும் அமிர்த கரைசல் தயாரித்தல் மற்றும் அதனை பயிர்களுக்கு தெளிப்பு செய்யும் முறைகள் குறித்து பயிற்சி வழங்கினார்.

சிவகாமி, வேளாண்மை உதவி இயக்குனர், விதை சான்றளிப்பு மற்றும் உயிர்ம சான்றிப்புத் துறை, ராமநாதபுரம், பயிற்சியில் கலந்து கொண்டு விவசாயிகள் உயிர்ம சான்று பெறுவதற்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் குறித்து விளக்கிப் பேசினார்.

கலைவாணி. வேளாண்மை அலுவலர். உச்சிப்புளி. மண்புழு உரம் தயாரித்து பயிர்களுக்கு வழங்குதல் குறித்து விவசாயி களிடையே விளக்க உரையாற்றினார். பயிற்சியில் தாமஸ். துணை வேளாண்மை அலுவலர். உச்சிப்புளி, ஆனந்தகுமார். உதவி விதை அலுவலர், உச்சிப்புளி மற்றும் மண்டபம் வட்டாரத்தைச் சார்ந்த 35க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர். பயிற்சி முடிவில் பானுமதி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் உச்சிப்புளி நன்றி உரை கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் உச்சிப்புளி செய்திருந்தனர்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Better Yield - Greater Profits
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# ஏுகோஸ் சுருள் வெள்ளை ஈக்கள் கட்டுப்படுத்தும் தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்கு எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவர்கள்



விருதுநகர், அக்.23

விருதுநகர் மாவட்டம், ஸ்ரீ வில்லிபுத்தூர் கலசலிங்கம் வேளாண்மை மற்றும் தோட்டக்கலை கல்லூரியின் இறுதி ஆண்டு இளங்கலை வேளாண் துறை மாணவர்கள் ஆகாஷ், எழில் ஆகாஷ், ஆனந்த முருகன், ஸ்ரீதர் நவீன், முகைதீன் பைசல், பாலசுப்ரமணியன், ஆகாஷ் குபேந்திரன் மற்றும் சந்தோஷ் சிவன் வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் கிராம தங்கல் திட்டத்தில் ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் தங்கி விவசாயிகளை




நேரில் சந்தித்து ஆலோசனைகளையும் செயல்முறை விளக்கமும் விழிப்புணர்வும் ஏற்படுத்தி வருகின்றனர். இம்மாணவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் தனலட்சுமி, வேளாண்மை அலுவலர் குருலட்சுமி, பாட ஆசிரியர் டாக்டர் ஜெயந்தி மற்றும் குழு ஆலோசகர் சதீஷ்குமார் அறிவுரையின்படி, செயல்பட்டு வருகின்றனர். இன்று மடவர்வளகம் வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தில் பாரம்பரிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் (PKVY) பற்றி விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. அதில் கலந்து கொண்ட வேளாண் துறை மாணவர்கள் ஏுகோஸ் சுருள் ஈக்கள் கட்டுப்படுத்தும் தொழில்நுட்பத்தை விவசாயிகளுக்கு எடுத்துரைத்தனர்.

# புரட்டாசிப் பட்ட மக்காச்சோள சாகுபடியில் அமெரிக்கன் படைப்புழு மேலாண்மை

● படைப்புழுவின் தாக்குதல் தற்போது சாகுபடி செய்யப் பட்டுள்ள மக்காச்சோள பயிர்களில் தென்படும்.

● இதனைக் கட்டுப்படுத்த வேப்பம் புண்ணாக்கு எக்டருக்கு 250 கிலோ என்ற அளவில் கடைசி உழவின் போது இடுதல் வேண்டும்.

● சையான்ட்ரினிலிபுரேல் 19.8% + தயமீத்தாக்சம். 19.8%-4 மி.லி ஒரு கிலோ விதைக்கு என்ற அளவில் விதை நேர்த்தி செய்ய வேண்டும்.

● இறவையில் தட்டைப்பயிர், எள், துவரை அல்லது சூரியகாந்தி மற்றும் மானாவாரியில் தீவன சோளத்தை வரப்பு பயிராக மூன்று வரிசையாக விதைக்க வேண்டும்.

● படைப்புழுவின் அந்திப்பூச்சிகளின் நடமாட்டத்தைக் கண்காணிக்க ஏக்கருக்கு 5 இனக்கவர்ச்சிப் பொறிகளை வைக்க வேண்டும்.

● படைப்புழுவின் பாதிப்பைக் கட்டுப்படுத்த மக்காச் சோளத்தின் பருவத்திற்கு ஏற்ப பின்வரும் பூச்சிக்கொல்லிகளில் ஏதேனும் ஒன்றை உபயோகப்படுத்த வேண்டும்.

**பயிர் முளைத்த 15- 20 நாள் வரை**

● குளோரான்டரினிலிபுரோல் 18.5 எஸ்.சி 0.4 மி.லி / லி அல்லது புளோபென்டியமைடு 480 எஸ்.ஸி 0.4 மி.லி / லி பாதிப்பு தொடர்ந்தால் அசாடிராக்டின் 1500 பிபிஎம் 5 மி.லி / லி தெளிக்க வேண்டும்.

**பயிர் முளைத்த 30 - 40 நாள் வரை**

● எமாமெக்டின் பென்சாயேட் 5 எஸ்.ஜி 0.4 கிராம் / லி அல்லது நெவலூரான் 1.5 மி.லி / லி அல்லது ஸ்பைனிட்ரோம் 11.70 எஸ்.ஜி 0.5 மி.லி ./ லி முதிர் குருத்து நிலையில் தெளிக்க வேண்டும்.

● மெட்டாரைசியம் அனிசோப்பிலேயே (த.வே.ப.க - மே.அ-ஜிடியூ) ஏக்கருக்கு ஒரு கிலோ என்றளவில் தெளிக்க வேண்டும்.

**பயிர் முளைத்த 60 நாள் கழித்து**

● ஸ்பைனிட்ரோம் 11.70 எஸ்.சி 0.5 மி.லி/ லி அல்லது எமாமெக்டின் பென்சோயேட் 5 எஸ்.ஜி 0.4 கிராம்/ லி (ஏற்கனவே 30- 40 நாள் வரை உபயோகப்படுத்தாத ஒன்றினை) பூ மற்றும் கதிர் உருவாகும் பருவத்தில் தெளிக்க வேண்டும் என்று சேலம் மாவட்டம், வீரபாண்டி வேளாண்மை உதவி இயக்குநர் பா.கார்த்திகாயினி விவசாயிகளை கேட்டுக் கொண்டுள்ளார்.

## தலைக் கவசம் உயிர்க் கவசம் முறையாக தலைக் கவசம் அணிவோம்

